# இலங்கை அரசு ராணுவத் தீர்வு காண முடியாது; பேச்சுக்களை ஆரம்பிக்கவே பாரதம் முயற்சி!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 17-12-85 செவ்வாய் ( மார்கழி 2 ரபியு ஆகிர் 4) முழக்கம் 312

## அமைச்சர் பஹுத் அறிவிப்பு

இலங்கையில் நடைபெற்றுவரும் வன்செயல்களுக்கு ஒரு முடிவைக் கொண்டுவந்து அங்குள்ள தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அங்கு இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்பதைப் பாரத அரசு தொடர்ந்தும் வலியுறுத்திவரும் என வெளியுறவு அமைச்சர் பி. ஆர். பஹுத் நேற்றுத் தெரிவித்தார். தமது அமைச்சிலுள்ள பாராளுமன்ற ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் அவர் பேசுகையில்: இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காண முடியாது என்பதைப் பாரதம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டினர். இலங்கையில் நடைபெறும் வன்முறைகளுக்கு இந்த உறுப்பினர்கள் அமைச்சரிடம் கவலை தெரிவித்தனர். இனப் பிரச்சினைப் பேச்சுவார்த்தைகள் நிலைபற்றி உறுப்பினர்கள் கேட்டபோது, கூட்டணி தெரிவித்த யோசனைகளை இலங்கை இப்போது தான் ஆராய்ந்துவருவதாக அமைச்சர் சொன்னர்.

# வடபகுதி நோக்கி வரிசையாக கவச வண்டிகளில் இராணுவம்

## வீதிப் போக்குவரத்துகள் தடை; ரயிலில் வந்த பயணிகள் யாழ்ப்பாணம் வரவில்லை

(வவுனியா)

**வவுனியாவிலிருந்து வடபகுதி நோக்கி அணியணியாக பல கவச வண்டிகளில் ஆயுதப்படையினர் மிகவும் மெதுவாக சென்றதால், வழி நெடுகிலும் பெரும் பரபரப்பு காணப்பட்டது. இதனுல் கண்டி வீதி வாகனப் போக்குவரத்துகளும் தடைப்பட்டன.**

சுமார் இருபதுக்கும் அதிகமான கவச வண்டிகள் வரிசையாக செல்லக் காணப்பட்டன. சீருடை தரித்தவர்கள் வாகனங்களுக்கு முன்னுலும், அருகாமையிலும், இடைநடுவிலும், பின்னுலும் நடந்து செலலக் காணப்பட்டனர்.

கவசவண்டிகளும் ராணுவத்தினரும் இவ்வாறு வருவதாக செய்தி எங்கும் பரவியதால் பிரதான வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது

வவுனியா பாதை வழியான சகல யாழ்ப்பாண பஸ் சேவைகளும் நேற்று நடைபெறவில்லை. அனுராதபுரத்திலி

... 6ம் பக்கம் பார்க்க

## கண்காணிப்புகுழு கொழும்பு திரும்பியது

யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் நேற்றுடன் தமது திருகோணமலை

... 6ஆம் பக்கம் பார்க்க

சவச்சாலைக்குள் போடப்பட்டிருந்த

## ஆண் 'சடலம்' எழுந்து வந்து கதவைத் தட்டி உயிர் மீட்டது

(நாஸிக்)

சவச்சாலைக்குள் போடப்பட்டிருந்த ஆண்சடலமொன்று எழுந்துவந்து, அதன் கதவைத் தட்டி, காவலுக்கு நின்ற பொலிஸின் உதவியுடன் தனது உயிரைக்காப்பாற்றிய சம்பவம் இங்குள்ள கொட்கி ஆஸ்பத்திரியில் நடைபெற்றுள்ளது.

இந்த நபரும், அவரது மனைவியும் அவர்களது வீட்டில் வெட்டுக்காயங்களுடன் இரத்

-6ம் பக்கம் பார்க்க

ராஜ்யசபாவில் மோகனரங்கம் எம். பி. எச்சரிக்கை

## பாக். ராணுவம் இலங்கைக்கு செல்வது தமிழரை அழிக்கவே!

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரைச் சமாளிப்பதற்காக இலங்கை அரசுக்கு உதவும் பொருட்டு பாகிஸ்தான் ராணுவத்தினர் கொண்டுவரப்படுவார்கள் என வந்துள்ள தகவல்கள் குறித்து அண்ணு திராவிட முன்னேற்ற கழக பாராளுமன்ற உறுப்பினர் ஆர். மோகனரங்கம் நேற்று ராஜ்யசபாவில் பேசும் போது கவலை தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா கொழும்பில் இது பற்றி வெளியிட்ட அறிக்கை விரும்பத்தகாத சூழ் நிலையை தோற்றுவித்திருப்பதாகவும் இதை பாரத அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் சொன்னர்.

பாகிஸ்தானில் இருந்து ஆயிரக் கணக்கான ராணுவத்தினரை தருவிப்பதன் நோக்கம் இலங்கையில் இருந்து தமிழினத்தை பூண்டோடு ஒழிப்பதற்கான திட்டமே எனவும் அவர் மேலும் சொன்னர்.

## மரக்கறி லொறி கடத்தல்; கூட்டு. சங்கத்தில் கொள்ளை

(மட்டுநகர்)

மட்டுநகரில் நேற்று இடம் பெற்ற இரண்டு கொள்ளைச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலிமடையிலிருந்து மரக்கறியுடன் வந்த லொறியொன்று செங்கலடி பதுளை வீதியில் ரூபம் என்ற இடத்தில் வைத்து இனம்தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்டது

மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறு

... 6ம் பக்கம் பார்க்க

★ பி. பி. ஸி. தொலைக்காட்சியில் ஒளிபரப்பான

## "குழப்பம் நிறைந்த சொர்க்க பூமி"; இலங்கை அரசு தகவல்களை மறுக்கிறது!

பிரித்தானிய தொலைக்காட்சியில் ''குழப்பம் நிறைந்த சொர்க்க பூமி'' என்ற தலைப்பில் காண்பிக்கப்பட்ட விவரணச் சித்திரப் படத்தில் பல வெளிப்படையான தவறுகளும் வேண்டுமென்றே புகுத்தப்பட்ட பொய்களும் இருந்தன என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி விக்கிரமவீரசூரிய நேற்று காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் அகதிகளின் பரிதாப நிலைமை பற்றி இந்த தொலைக் காட்சிப் படத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டது. ஆனுல் அங்குள்ள சிங்கள, முஸ்லிம் அகதிகள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என அவர் சொன்னர்.

இந்தப் படத்தைப் பிடிப்பதற்கு அதிகாரிகள் அனுமதி

...6ம் பக்கம் பார்க்க

## யாழ்நகர் - அனுராதபுரம் தினசரி இணைப்பு பஸ்சேவை

வட பகுதிக்கான ரயில் சேவை தற்போது அனுராதபுரம் வரை மட்டுமே நடத்தப்படுவதால் யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்திற்கான பஸ் சேவையொன்றை வட பிரதேச போக்குவரத்துச் சபை தற்போது நடத்துகின்றது.

தினசரி காலை 5-30 மணிக்கு இந்த பஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து புறப்படுகின்றது. இதற்கான ஆசனங்களை

...6ம் பக்கம் பார்க்க

## மகாதேவா தாம்போதி திறந்துவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

''பலவருடங்களாக எடுக்கப்பட்ட முயற்சி பலருடைய உழைப்பினுலும், பல ஸ்தாபனங்களினது ஒத்துழைப்பாலும் இன்று பூர்த்தியாகியுள்ளது'' என்று மகாதேவா தாம்போதியை நேற்றுத் திறந்து வைத்துப் பேசும்போது யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

மிகவும் அமைதியான முறை

6ம் பக்கம் பார்க்க

## வவுனியா அரச அதிபர்

(வவுனியா)

நீண்டகாலமாக லீவில் நின்ற வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வவுனியா சென்று தமது பணியினைத் தொடர்ந்துள்ளார்.

## பஸ்களில் தபால்கள் பயணம் அதனுல்பிந்தியே கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இப்பகுதிக்கான தபால் சேவையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கு அனுபபப்படும் கடிதங்களும், வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் கடிதங்களும், யாழ்ப்பாணத்திற்கும் அனுராதபுரத்திற்கும் இடையில் போக்குவரத்துச் சபை பஸ் மூலமே கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனுல் வழமையைவி இரண்டு அல்லது மூன்றுதினட

... 6ம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இளையதம்பி செல்வராசா, நாவற்கட்டை வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்பவரின் அடையாள அட்டை இல. 600342428V தவறிவிட்டது கண்டெடுப்பவர்கள் மேற்கூறிய விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## புள்ளிகள் இடப்படாத தேர்ச்சி அட்டை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய நான்காம் வகுப்பு ஏ பிரிவு மாணவர்களுக்கு மூன்றாந் தவணைப் பரீட்சை முடிவில் வழங்கப்பட்ட 'மாணவர் தேர்ச்சி அறிக்கை'யைப் பார்வையிட்ட பெற்றோர்கள் வியப்புத் தெரிவித்துள்ளார்கள்.

இத் தேர்ச்சி அறிக்கையில் வகுப்பேற்றப்பட்டுள்ளார்கள் எனவும் அடுத்த தவணை ஆரம்பம் 6-1-86 என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாந் தவணைப் பரீட்சைகள் நடைபெற்ற போதிலும் மேற்படிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளோ அல்லது அது சம்பந்தமான வேறு விபரங்களோ தெரிவிக்கப்படவில்லை.

பாடசாலை நாட்கள், மாணவர் வரவு போன்ற விபரங்கள் கூட இங்கு தெரிவிக்கப்படவில்லை.

இம்முறை பரீட்சை நடைபெற்ற போதும் அதன் பின்னரும் சுமுகமான நிலையே நிலவிய போதிலும், ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் அசிரத்தையையும், அக்கறையின்மையையுமே இது எடுத்துக்காட்டுவதாக பெற்றோர்கள் புகார் தெரிவிக்கின்றார்கள்.

## தீட்சை வழங்கும் வைபவம்

(புலோலி)

இலங்கை சைவமன்றம் பருத்தித்துறை சிவன்கோவில் பர்வதவர்தினி கலா மண்டபத்தில் நடாத்திய தீட்சை வழங்கும் வைபவத்தில் ஆண்கள், பெண்கள் உட்பட 50 பேர் தீட்சை பெற்றனர்.

பிரம்மஸ்ரீ வரதராஜாக் குருக்கள் தீட்சை வழங்கும் வைபவத்தை நடாத்தினர். இங்கு தீட்சைபெற்ற சகலருக்கும் இலங்கை சைவ மன்றம் ''தீட்சை'' பற்றிய நூல் ஒன்றையும் இலவசமாக வழங்கியது.

பிரபல தொழிலதிபரும் சமயத் தொண்டருமான திரு. அ. நாகரத்தினம் (குகன்), பருத்தித்துறை நகரசபை முன்னாள் உப-தலைவர் டாக்டர். எஸ். வேல்முருகு, பேராசிரியர் வீ. கே, கணேசலிங்கம், தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலய முகாமையாளர் திரு. கே. பாலசுந்தரம், யாழ். விஞ்ஞானக்கல்வியதிகாரி திரு. எஸ். செல்லத்துரை இளைப்பாறிய புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலய உப-அதிபர் திரு. எஸ். ஈசுரபாதம் இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. வயிரவிப்பிள்ளை உட்பட இன்னும் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். இத் தீட்சை வழங்கும் வைபத்திற்கான சகல ஒழுங்குகளையும் இலங்கை சைவமன்ற செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணசிங்கம் மேற்கொண்டிருந்தார்.

## இடமாற்றம்

(நீர்வேலி)

நீர்வேலி உப – அபிவிருத்தி அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் திரு. அ. துரைராஜா உள்ளூராட்சிச் சேவை தரம் ஒன்றிற்கு பதவி உயர்த்தப்பட்டு திருமலை நகர சபைக்கு எதிர்வரும் முதலாம் திகதி இடம்மாறிச் செல்கின்றார். இப்பகுதி மக்கள் நலன் கருதி அவர் இதனை ரத்துச் செய்யுமாறு கோரியுள்ளதாகத் தெரிகிறது.


சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் தாபனத்தின்

**ஈழமுரசு, செய்திக்கதிர்**

ஆகியவற்றின் சகோதர வெளியீடாக புதியதொரு இலக்கிய மாத இதழ்

**அமுர்த கங்கை**

**1986 பொங்கல் அன்று வெளிவருகிறது.**

படைப்பாளிகள் அனைவரும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;

கௌரவ ஆசிரியர்
அமிர்த கங்கை
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்



**வெற்றிடம்**

**முகாமையாளர் (வேலைகள்)**

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அச்சகமொன்றுக்கு முகாமையாளர் (வேலைகள்) தேவை. அச்சக நிர்வாகம் அல்லது கணக்கியல் தராதரத்துடன் கூடிய நிர்வாக சேவையில் அனுபவம் உள்ளவர்கள் ஓய்வுபெற்றோர் உட்பட விண்ணப்பிக்கலாம். முன்னனுபவம், கல்வித் தகைமை, எதிர்பார்க்கும் சம்பளம் ஆகியவற்றை குறிப்பிட்டு கடித மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

விளம் இல: B / 915. முடிவு திகதி: 20-12-1985

C/o. ஈழமுரசு, 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.


## பெயரில்லா வீதிப் பலகை

(சுண்டுக்குளி)

கொழும்புத்துறை கிழக்குக் குறுக்கு வீதிகள் பெயர்ப்பலகைகள் இன்றி அநாமதேயமாகக் காட்சியளிப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே சிவஞானத்திடம் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா மகஜர் மூலம் முறையிட்டுள்ளார்.

இம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-கடந்தஆறுவருடங்களுக்கு மேலாகக் கொழும்புத்துறை கிழக்கு முதலாம் குறுக்கு வீதியிலிருந்து ஐந்தாம் குறுக்கு வீதி வரை உள்ள வீதிப் பெயர்ப் பலகைகள் அனைத்தும் அழிந்துபோன நிலையிலுள்ளன. இதனால் வெளியூர்களிலிருந்து வருபவர்களும், தபால் ஊழியர்களும் எத்தனையாம் குறுக்குத் தெரு என்று கண்டு பிடிப்பதில் மிகவும் சிரமமடைந்து வருகின்றனர். எனவே, இப்பெயர்ப் பலகைகளை மக்கள் வாசித்து அறியக் கூடிய வகையில் மையினால் எழுதிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.''

## பாவனையாளர் சங்க கூட்டம்

(வேலணை)

பிரதேசப் பாவனையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று நாளை புதன்கிழமை மாலை 2 மணிக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ். விலைக்கட்டுப்பாட்டாளர் திரு.கே.கே. மதிவதனனும் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கூட்டத்தில் பாவனையாளர் சங்கங்களிலிருந்து பொறுப்பான ஐவருக்கு உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

## விவசாய ஆசிரியர் பயிற்சி

(புங்குடுதீவு)

விவசாய ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்பொன்று இம்மாதம் 18ம் திகதி முதல் 20ம் திகதி வரை திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

மூன்று தினங்களுக்கு நிகழவுள்ள இப்பயிற்சி வகுப்பில் விசேட பயிற்சி பெற்ற விவசாய ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்களம் பணித்துள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் யாழ். கல்வித் திணைக்களம் இச்சேவைக் காலப் பயிற்சி வகுப்பினை ஒழுங்கு செய்துள்ளது.

## நேர்முக பரீட்சை

(வேலணை)

தேசியத் தொழிற் பயிற்சிச் சபையினரால் கிராமியத் தொழிற் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோருக்கான நேர்முகப் பரீட்சையொன்று வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

தையல்பயிற்சி, தச்சுவேலைப் பயிற்சி, மேசன் வேலைப் பயிற்சி போன்ற தொழிற் பயிற்சிகளை தேசிய தொழிற் பயிற்சி சபையினர் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் நடாத்தவுள்ளனர்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## பிறந்தநாள் வாழ்த்து

✻ திருநெல்வேலி, இராஜதுரை திலகவதி தம்பதியின் மகன் பகீரதன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பரந்தன், சிதம்பரநாதன் தியாகேஸ்வரி தம்பதியின் மகன் சிறிஹரன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பாஷையூர், செல்வம் அன்னம்மா தம்பதியின் மகள் குணேகா இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ அரியாலை இரத்தினசிங்கம் உஷாகாந்தி தம்பதியின் மகள் மதுரா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✻ திருநெல்வேலி தெற்கு, நகுனகுலசிங்கம் புஷ்பராணி தம்பதியின் மகன் நிர்த்தனன் இன்று தனது ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ சுன்னாகம், இரத்தினசிங்கம் சரசுப்பிள்ளை தம்பதியின் மகன் கேசவராஜா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ முள்ளியவளை, நடராசா லீலாவதி தம்பதியின் மகள் நித்யா இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

### பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் ரியூல் கிறேம் பேட் (றஜீன்)

இல. 26, குமரபுரம், பரந்தன் நோபேட் - சந்திரா தம்பதிகளின் புதல்வன் ரியூல் கிறேம் பேட் (றஜீன்) 17 - 12 - 85இல் தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். அவரைப் புனித அந்தோனியார் அருள் பெற்று நலமுடன் வாழ அனைவரும் வாழ்த்துகின்றனர்.

## சிறப்புச்சித்தி

(சரசாலை)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த சித்தியடைந்துள்ளனர். தென்மராட்சியில் சித்தியடைந்த பதின்மூன்று மாணவர்களில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் ஐவர் சித்தபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புதிய பயிற்சி நெறி

(கொடிகாமம்)

கைதடி வெளிக்கள கல்வி ஆய்வு நிலையத்தில் அடுத்த தவணை முதல் பல புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக இந் நிலையத்தை அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகப் பதிவதற்கு சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள செயல் திட்டங்களுக்கு பனம் பொருள் அபிவிருத்திச் சபை நிதியுதவி அளிக்கவுள்ளது. இந் நிலையத்திற்கு தேவையான தளபாடங்களை வழங்க இங்குள்ள சில தொழிற்சாலைகள் முன் வந்துள்ளன.

## மோசடி பிடிபட்டது

(புலோலி)

அப்பியாசக் கொப்பியில் கொள்ளை இலாபமடித்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனைக் கடையொன்று விலைக் கட்டுப்பாட்டுப்பரிசோதகர்களிடம் வகையாகச் சிக்கிக் கொண்டது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வரும் கட்டைவேலி-நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனைக் கடையே விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களிடம் சிக்கிக் கொண்டதாகும்.

பொது மக்களின் புகாரையடுத்து யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தைச் சேர்ந்தவிலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களான திரு. க. கனகசபை, திரு. க. இரத்தினம், திரு. த. சிவேஸ்வரதம்பி ஆகியோரடங்கிய குழுவொன்று வடமராட்சிப் பகுதிக்குத் திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டு பொது மக்களின் புகார் பற்றி விசாரணை செய்தது.

அப்போதே மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இவ் விற்பனைக் கடையில் 1-45 சதத்திற்கு விற்பனை செய்யப்பட வேண்டிய அப்பியாசக் கொப்பி 5 சதம் கூட்டி 1-50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டபோது விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களிடம் பிடிபட்டது.

## கந்தபுராண பிரசுரம்

(சரசாலை)

சுழிபுரம் இந்து இளைஞர் சங்கத்தினர் கந்த புராண வசனத்தை சுருக்கமாகப் பத்தொன்பது பக்கங்களில் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். திருமுருக கிருபானந்தவாரியார் எழுதிய நூலில் இருந்து மேற்படி சுருக்கத்தினை எடுத்து சிறுநூலாக வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தட்டுப்பாடு நீங்கியது

(நீர்வேலி)

நீர்வேலி ஆயுர்வேத வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக நிலவி வந்த மருந்து வகைத் தட்டுப்பாடு நீங்கிவிட்டது. பல ஆயுர்வேத வைத்தியசாலைகளின் தலைமையகமாக நீர்வேலி ஆயுர்வேத வைத்தியசாலை இருந்து வருகிறது. யாழ் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபன, யாழ். அபிவிருத்தி அலுவலக உதவிச் செயலாளர் திரு. பொ பாலசிங்கம், நீர்வேலி ஆயுர்வேத வைத்தியசாலை மருத்துவ உத்தியோகஸ்தர். திரு. இரா. சுப்பிரமணியம், ஆகியோர் எடுத்த நடவடிக்கையினால் போதியளவு மருந்துகள் நீர்வேலி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வந்துள்ளன.

சுகாதார வாழ்வுக்கான செலவு

# மருத்துவமனைச்செலவிலும், பன்மடங்கு குறைவானது

(உடுவில்)

"சுத்தம் சுகம் தரும்" நாம் கல்வியை எவ்வளவு பிரதானம் எனக் கற்கின்றோமோ அது போலவே சுகாதாரமாக வாழவும் பழகிக் கொள்ள வேண்டும். சுத்தமாக நாம் வாழ்வதற்கு செலவழிக்கும் பணத்தைவிட அசுத்தமாக இருந்து ஆஸ்பத்திரிகளுக்கு செலவழிக்கும் தொகை பன்மடங்கு அதிகமாகும். வெள்ளம் வருமுன் அணை கட்டிக் கொள்வது போல, நோய்கள் வருமுன் தடுப்பூசி, மருந்துகளை ஏற்றிக் கொண்டால் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாகவிருக்கும்."

இவ்வாறு சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற சுகாதார தினப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படிப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வைத்திய கலாநிதி திருமதி. ஆர். சோமசுந்தரம், பேசுகையில் அரிது அரிது மானிடராவது அரிது என்பர், மனிதராகப் பிறந்த நாம் சுத்தமாக வாழ தெரிந்து கொள்ள வேண்டும். போஷாக்கு நிறைந்த உணவுகளைக் உட்கொள்வதனாலும் வெளியிடங்களில் பலர் கைபட்ட உணவுகளை உட்கொள்ளாமல் விடுவதனாலும் வைத்திய நிலையங்களை நாட வேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படாது" எனத் தெரிவித்தார்.

உடுவில் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். தங்கவேலாயுதத்தினால் உடுவில், சங்குவேலி சுகாதாரத்தொண்டர்களுக்கிடையே நடாத்தப்பட்ட வினா விடைப்போட்டியில் சங்குவேலி தொண்டர்கள் வெற்றிபெற்றனர்.

பிரதம விருந்தினரால் தொடக்கி வைக்கப்பட்ட கயிறு இழுத்தல் போட்டியிலும் சங்குவேலி சுகாதாரத் தொண்டர்கள் வெற்றியீட்டினர்.

பாடசாலை பற் சிகிச்சை விரிவுரையாளர் திருமதி என். இராசதுரையினால் பற்களைப் பாதுகாக்கும் முறைபற்றி செயல்விளக்க மூலம் செய்து காட்டப்பட்டது. வைத்திய கலாநிதி திரு. ரி. சரவணபவானந்தன், இ. தெய்வேந்திரன் ஆகியோரும் உரையாற்றினர்கள்

இறுதியாக போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள், தொண்டர்களுக்கு பிரதம விருந்தினரால் பரிசில்கள் வழங்கப்பட்டன எஸ். தங்கவேலாயுதம் சகலருக்கும் நன்றி தெரிவித்தார்.

# பருத்தித்துறை கொத்தணி அமைப்பில் பத்துப் பாடசாலைகள் இயங்க ஏற்பாடு

(புலோலி)

கல்வி அமைச்சின் புதிய திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கல்வி வட்டாரத்தில் பரீட்சார்த்த புலோலி கொத்தணி அமைப்பு செயற்படத் தொடங்கியுள்ளது.

இக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபராகப் புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலய அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் கொத்தணி அமைப்பின் கீழ் வட-இந்து மகளிர் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம், புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலை, தம்பசிட்டி மெதடிஸ் மிஷன் பாடசாலை, தட்டாதெரு மெதடிஸ் மிஷன் பாடசாலை, மாதனை மெதடிஸ் மிஷன் பாடசாலை, புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, துன்னாலை மேற்கு மெதடிஸ் மிஷன் பாடசாலை, புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகிய பத்து பாடசாலைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன. இக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயமே இயங்கும்.

இக் கொத்தணிப் பாடசாலைகளின் திட்டமிடல், முகாமைத்துவம், மேற்பார்வை நிர்வாகம்உட்பட வட்டாரக்கல்வியதிகாரியின் கடமைகளைக் கொத்தணி அதிபர் திரு ஏகாம்பரநாதனே மேற்கொள்ளுவார்.

### கி. அ. சங்க கூட்டம்

(புலோலி)

பருத்தித்துறை குடத்தனை பொற்பத்தை கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் பருத்தித்துறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. என். கந்தசாமி தலைமையில் நடைபெறுமென சங்கச் செயலாளர் திரு. வி. சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

விரிவுரையாளர் பேச்சு:

# சமுதாயத் தேவையை கல்வி பூர்த்தி செய்தல் வேண்டும்

(கொடிகாமம்)

"சமுதாயம் வேண்டி நிற்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்வி அமைதல் வேண்டும். எனவே ஆசிரியர்கள் பாடங்களை மட்டும் கற்பிப்பதோடு நின்றுவிடாது மாணவரின் உணர்வுகள், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன வளர்ச்சியடையக் கூடிய வகையில் உதவவேண்டும்." இவ்வாறு மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய லாவி ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திரு. கு. சதாசிவமூர்த்தி குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர்கள் பல்வேறு வகையில் தம் பங்களிப்பைச் செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தம்மாலான பங்களிப்பைச் செய்வதன்மூலமே பாடசாலை வளர்ச்சி பற்றி கதைப்பதற்கு நியாயபூர்வமான உரிமை உடையவர்களாவர்" எனக் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. சி. சின்னராசா தனது உரையில் "இப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர் கல்வி பாதிப்புறு வண்ணம் தொண்டர் ஆசிரியர் ஆற்றும் பணி மிகவும் பாராட்டத்தக்கதாகும். இப்பாடசாலையில் அடுத்த ஆண்டுகளில் மாணவர் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் மேல் வகுப்புக்களை இங்கு ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படும்" எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் அதிபர் ச. தம்பு, ஆசிரியர் வீ. சிவகுரு ஆகியோரும் உரையாற்றினர்.

### கூட்டு கரோல்

(காரைநகர்)

தென் இந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீன வாலிப ஐக்கியங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் வருடாந்த கூட்டுக் கரோல் ஆராதனை இம் மாதம் 21ம்திகதி சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

வண. பிதா ஏச்.ஆர்.எஸ். ஜெயச்சந்திரன் தேவாசீர்வாதம் வழங்குவார். இவ்வைபவத்தில் யாழ் ஆதீனப் பேராயர் வண. பிதா ஜே.டி. அம்பலவாணரும் கலந்து கொள்வார்.

# "தன் இனம், நாட்டைக்காக்க வெடியரசன் போராடினர்"

(சுண்டுக்குளி)

"வெடியரசன் எம் மத்தியில் வாழ்ந்த சிறந்த வீரராகத்திகழ்ந்தார். ஸ்ரீ நாராயண பக்தி இவரை மாபெரும் வீரனாகப் புகழ் பெற்று விளங்க வைத்தது. தன்னினத்தையும், நாட்டையும் காக்க வெடியரசன் போராடியது போல், ம் ஒவ்வொருவரும் எம்மினத்தையும், மதத்தையும்காக்கமுன்வர வேண்டும். வெடியரசன் புகழ் இன்று காவியமாகப் போற்றப் படுவது எமக்குப் பெருமிதமூட்டுகின்றது."

இவ்வாறு வெடியரசனுக்குச் சிலை நிறுவுதல், வெடியரசன் வரலாற்று நூல் வெளியிடுதல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், திரு. கி. வைரமுத்து ஜே. பி. குறிப்பிட்டார். இந்த ஆலோசனைக் கூட்டம் தொல்புரம் மத்தி இந்து இளைஞர் மன்ற மடாலயத்தில் நடைபெற்றது.

சகல கிராமங்களிலிருந்தும் வெடியரசன் வாழ்க்கை வரலாறு பற்றிய பூரண விபரங்களை நுணுக்கமாக ஆராய்ந்து நூலாக வெளியிடுவதென்றும் வெடியரசனுக்குச் சிலை நிறுவுவதென்றும், சிலை அமைக்கும் இடம் பற்றிப் பொதுச் சபையில் ஆராய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் கே.சோமசுமந்தரம், திரு ஈ. சதாசிவம், திரு. மு. தம்பியையா, ய ழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைச் செயற்குழு உறுப்பினர் திரு. சி. சி. வரதராசா ஆகியோரும் பேசினர். பின்வருவோரைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றும் தெரிவு செய்யப் பட்டது.

போஷகர்கள்: உதவி அரச அதிபர் திரு. து வைத்திலிங்கம், திருவாளர்கள் கா. சின்னத்துரை, இரா.செல்வராசா, ஜே. பி., தலைவர் திரு. கி. வைரமுத்து ஜே. பி, உப தலைவர் டாக்டர் கே. சோமசுந்தரம், செயலாளர் திரு. நா. முருகையா, உப செயலாளர். திரு. ஆ முருகேசு, பொருளாளர்: திரு. எஸ். மகாலிங்கம்.

# 'ஆரோக்கியமான உடல்தான் தெளிவான சிந்தனை அளிக்கும்'

(நல்லூர்)

"எதிர்காலச் சந்ததியினரான இலைஞர்கள் தமது இளமைக் காலத்திலே நல்ல பழக்க வழக்கங்களையும், நல்ல ஒழுக்கத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும். எமது இளைஞர்களுக்கு இன்று கட்டுப்பாடும், ஒழுக்கமும், தலைமையை ஏற்கும் பண்பும் மிக அவசியமாகும். இப்படியான விடுமுறைப் பாசறைகளில் இக்குணங்களை மாணவர் கற்றுக்கொள்ளவும், அவைகளைக் கடைப்பிடிக்கவும் கற்றுக்கொள்ள வாய்ப்பும், வசதியும் ஏற்படுகின்றன."

இவ்வாறு யாழ். வை. எம் சி. ஏ. ஸ்தாபனத்தின் இருபதாவது வருடாந்தப் பாசறையில் வை. எம். சி. ஏ. கொடியை ஏற்றிவைத்துப் பாசறையில் கலந்துகொண்ட மாணவ-மாணவிகளின் அணிவகுப்புமரியாதையை ஏற்றுக்கொண்ட யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத் தலைவர் திரு. எம். சி. பிரான்சிஸ் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பரி. யோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலைப் பகுதியில் யாழ். றோட்டரிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பாசறையை திரு. ஸ்ரீவன் ஜெபஞ் செய்து தொடக்கி வைத்தார்.

தலைவர் திரு. எம். சி பிரான்சிஸ் தொடர்ந்து பேசுகையில், "ஒருவனுக்கு உடல், உள்ளம், ஆவி ஆகிய மூன்றும் மிக முக்கியமானவையாகும். உடல் சிறந்த முறையில் நல்லாரோக்கியத்துடன் இருந்தால் உள்ளமும் சிறந்த சிந்தனைகளையும், செயல்பாடுகளையும் கொண்டுவளரும். ஆகவே இதுபோன்ற பாசறைகளில் கலந்துகொள்ளும் இளைஞர்கள் இப்பாசறையிலிருந்து அநேக நல்ல காரியங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தப் பாசறை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள பெருமளவு இளைஞர்கள் ஆண்களும், பெண்களுமாக முன்வந்திருப்பதற்கு யாழ். வை. எம். சி. ஏ. நன்றி கூறுகின்றது" என்றும் குறிப்பிட்டார்.

வை. எம். சி. ஏ. உதவிச் செயலாளரும், பாசறைப் பொறுப்பாளருமான திரு.யே.என். பொன்னையா எல்லோரையும் வரவேற்றுப் பேசியதுடன், எல்லாரையும் அறிமுகஞ் செய்து வைத்தார்.

சுகாதாரக் கண்காணிப்புக் குழு

# கற்ற பெரியோரின் சேவை பெற முன்வர வேண்டும்

(சாவகச்சேரி)

"சாவகச்சேரித் தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதாரத் தொண்டர்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், ஆகிய அத்தியாவசியப் பாடங்களை இலவசமாக கற்றுக் கொடுக்க ஆசிரியர்கள் தயார். ஆனால் அதற்கான ஆயுத்தங்களை ஏன் இந்த ஆரம்ப சுகாதார தொண்டர்களின் கண்காணிப்புக் குழு செய்யவில்லை."

இப்படிக் கவலை தெரிவிக்கிறார், சாவகச்சேரி நகர சுகாதார பரிசோதகர் திரு. எஸ். செல்வபாஸ்கர துரைநாயகம்.

சாவகச்சேரி நகரசபைமேல் மாடியில், இப்பகுதி ஆரம்ப சுகாதார தொண்டர்களுக்கான பற்சுகாதாரகருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதற்குத் தலைமை தாங்கிப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கவலை தெரிவித்தார்.

"எமது இளைய சமுதாயம் பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பு தரப்படுத்தல் காரணமாக இல்லை. ஆனால், அவர்கள் ஆரம்ப சுகாதார தொண்டர்களாக கடமை செய்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் அவசியம் தேவைப்படுகிறது.

இத்தேவையை நன்குணர்ந்த படித்தவர்கள் பெரியவர்கள் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மூன்றையும் இலவசமாக கற்பிக்க முன் வந்துள்ளனர். இதைக் கண்காணிப்புக் குழு நன்கு பயன்படுத்த வேண்டும். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும். தொண்டர்களே குழுக்கள் மூலம் நீங்கள் இவற்றைகற்க முயற்சி செய்யுங்கள்" என்று அவர் மேலும் பேசுகையில் சொன்னார்.

மீசாலை வைபவத்தில் பேச்சு:

# கனிதரு மரங்கள் அளிக்கும் நற் பலன்களோ அனந்தம்

(சாவகச்சேரி)

"ஒரு நாடு இயற்கை அழகுடன், நல்ல இயற்கை வளங்களை வாரி வழங்குகிறது என்றால், அதன் தலையாய காரணம் மரங்கள்தான். அதிலும் குறிப்பாக கனிதரு மரங்கள் தான் என்றால் மிகையாகாது. குழைக்காடு என்றழைக்கப்படும் தென்மராட்சிப் பகுதியில் மரம் நாட்டும் ஒரு வைபவத்தை ஒரு விழாவாகக் கொண்டாடுவது மிகப் பொருத்தமானதே. அதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்."

இவ்வாறு மீசாலை விக்னேஸ்வரவித்திய லய அதிபர் திரு. எஸ். என் இராஜநாயகம் பாடசாலை வளவில் மரம் நடுவைபவத்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசுகையில், மீசாலை கனி தரு மரம் நிறைந்த ஒரு ஊர். மேலும் பயன் தரு மரங்களைத் திட்டமிட்டு நாட்டி வளர்ப்பதன் மூலம், மனிதன் தன் உணவையும் சிறப்பித்துக் கொள்ள முடியும். அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கும் வீட்டுத் தோட்டத்தில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு அவர்களின் எதிர் காலத்தையும் ஒளிமயமாக்க முடிகிறது. அதற்கு இம் மரநாட்டு வைபவம் நல்ல வாய்ப்பு" என்றார்.

சவுதி அரேபியாவில்

றைவர், மெக்கானிக், எலக்றிசன், லேபரஸ், சுப்போவசியர் ஆகிய வேலைதேடிச் செல்வோர் தொடர்பு கொள்ளவும்.

அலங்கார் ஏஜென்சீஸ்
5, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.
(கடவுச் சீட்டு, BOND ஆகியவை செய்துகொடுக்கப்படும்)

### உதய சிந்தனை

சத்திய விரதம், மௌன விரதம், பொறுமை ஆகியவைகளை உடைய வனின் வார்த்தையே பலிக்கும்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

17-12-85 செவ்வாய்க்கிழமை (குரோதன) மார்கழி-02

# நாட்டின் முதுகெலும்பை தொண்டா தட்டுவாரா?

மலையகத் தமிழ் மக்களுக்கான நியாயம் கோரி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பிக்கவிருக்கும் நியாயமான போராட்டம், தமிழர்களின் தனிப்பெரும் திருநாளான பொங்கல் பண்டிகையுடன் ஆரம்பமாகவுள்ளது.

அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை வழியில் பிரார்த்தனை இயக்கமாக முதல் மூன்று மாத காலத்துக்கு இப்போராட்டம் நீடிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை முதல் நண்பகல் வரை தத்தமது வீடுகளிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் பிரார்த்தனைகளை நடத்துவர்.

நண்பகலுக்குப் பின்னரே இவர்கள் தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்வர்.

தமது வீடுகளில் இவர்கள் நடத்தும் பிரார்த்தனை, தங்கள் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்க வேண்டுமென்ற வேண்டுகோளின் அடிப்படையில் அமையுமென காங்கிரஸின் தலைவரான அமைச்சர் தொண்டமான் விளக்கப்படுத்தியுள்ளார்.

நண்பகலுக்குப் பின்னரே தோட்டங்களுக்குச் சென்றாலும் முழு நாள் சம்பளத்தை தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வழங்கத்தவறினால், பிரார்த்தனைப்போராட்டம் பின்னர் வேறு வகையானதாக மாற்றம் காணும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

சுருக்கமாகச் சொல்வதானால், அரைநாள் வேலைக்கு முழு நாள் சம்பளம் கேட்கும் அதேவேளையில், தேயிலைக் கொழுந்துகள், தேயிலை மரத்தின் இலைகளாக மாறிய பின்னரே பிடுங்கப்படும் என்பதும் இப்போராட்டத்தில் தெட்டத் தெளிவாகின்றது.

கேட்டுக் கேட்டுப் பெறமுடியாதவைகளை, பேச்சுவார்த்தைகள், மகஜர்கள் மூலம் பெறமுடியாதவைகளை பிரார்த்தனைப் போராட்டம் மூலம் பெறமுடியுமென்ற நம்பிகை காங்கிரஸுக்கு இப்போது வந்துள்ளது.

வெளித்தோற்றத்திற்கு இது ஒரு பிரார்த்தனைப் போராட்டம் என்று கூறப்பட்டாலும் கூட, அரசாங்கத்தின் பொருளாதாரத்தைத் தட்டிப் பார்க்கும் ஒரு நடவடிக்கையென்றே இதனைக் கொள்ள வேண்டும்.

இஸ்ரேலின் உதவியை நாடியதையடுத்து மத்திய கிழக்குப்பகுதிகளில் இலங்கையின் தேயிலைச்சந்தை பாதாள வீழ்ச்சி கண்டுள்ளது.

கொழும்பு தேயிலை ஏல விற்பனையிலிருந்து சோவியத் யூனியன் இரு தினங்களுக்கு முன்னர் விலகியதால், இதன் விலை பெரும் வீழ்ச்சி கண்டது.

நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் தேயிலை உற்பத்தியில் பெரும் பாதிப்பை தோட்டத் தொழிலாளர்களின் பிரார்த்தனைப் போராட்டம் ஏற்படுத்தும் என்பதை அனைவரும் நன்கறிவர்.

இதனை மனதில் கொண்டே, "டாக்காவால் திரும்பியதும் இப்பிரச்சினை சம்பந்தமாக பேசி ஒரு முடிவுக்கு வருவோம்" என்று தொண்டமானிடம் ஜனதிபதி கூறிச் சென்றிருந்தார்.

டாக்காவால் திரும்பியதும், பாகிஸ்தான் ஜனதிபதி இலங்கை விஜயம் மேற்கொண்டதால், தொண்டமானுடன் பேசும் சந்தர்ப்பம் ஜனதிபதிக்கு ஏற்படவில்லைப் போலும்.

ஆனாலும், தொண்டமான் கிளப்பியுள்ள பிரச்சினையை மறக்க முடியாத ஜனதிபதி, தமது மாளிகையில் பாகிஸ்தான் ஜனதிபதிக்கு தொண்டமானை அறிமுகப்படுத்தும் போது, "தொண்டமானும் இப்போது தொல்லைதரப் பார்க்கிறார்" என்று கூறியிருப்பது பல அர்த்தங்கள் பொதிந்தது.

அகிம்சை வழியில் 1958ம் ஆண்டு முதல் இனப்பிரச்சினைக்குப் போராட்டம் நடத்திய தமிழ் மக்கள், இன்று ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு மாறியுள்ளனர்.

காந்தியம் பேசுபவர்கள் காந்தி கொள்கைக்கு மதிப்பளிக்காததால் ஏற்பட்ட நிலை இது.

இந்த வேளையிலும், காந்தியக் கொள்கையைக் கைவிடாது தொண்டமான் ஆரம்பிக்கும் "போர்", மறைமுகமாக நாட்டின் முதுகெலும்பைப் பதம் பார்க்கும் திட்டம் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

இதனால், பொங்கலுக்கு முன்னர் ஏதாவது கூறி, இப்போராட்டத்தை நிறுத்தச் செய்யவே ஆட்சியாளர்கள் முயல்வர்.

அப்பொழுது தொண்டமான் என்ன செய்வாரோ?

### ★ இன்று விநாயக சஷ்டிவிரதம்

# ஒலிக்கு முதலிடம் வழங்கும் ஓங்கார வடிவன் விநாயகன்

சீர் பூத்த கருவி நூல்
உணர்ச்சி தேங்க
சிவம் பூத்த நிகமாகமங்கள்
ஓங்க
பார் பூத்த புறச்சமய இருள்
கள் நீங்க
பரம் பூத்த சைவநிலை பா
ரோர் தாங்க
பேர் பூத்த சிவானந்தத்
இனிது தூங்க
பிறை பூத்த சடைமௌவிப்
பிரானார் தந்த
வார் பூத்த அறிவிச்சைத்
தொழில் என்றேதும்
மதம் பூத்த விநாயகன்
தாழ் வணங்கி வாழ்வாம்.

'அறிவிச்சைத் தொழில் என்றேதும் விநாயகன் தாழ்' என்று இந்த ஆசுகவி, விநாயக தோத்திரத்தில் நாவலர் பெருமான் விக்கினங்கள் தீர்க்கும் ஓங்கார சொரூபியான ஆனைமுகனை குறிப்பிடுகிறார் "சத்தாகி என்சித்த மிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று பாடினார் தாயுமான சுவாமிகள். 'காடனை மாடனை போற்றும் அறிவிலிகாள் சுத்த அறிவே தெய்வமென்று ஓதி உணரீரோ'? என்று கேட்கிறார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். சுத்த மெய்ஞ்ஞான அறிவே கடவுள். மானிட ஜன்மத்திற்கு கிடைத்த இந்த ஆறாவது அறிவை முதல் கூர்மைப் படுத்துவதுதான் விநாயக வணக்கம்.

எந்தக் கருமம் தொடங்கும் போதும் விநாயக வணக்கம் செய்ய வேண்டும் என்பதன் உண்மைக் கருத்து இதுதான். எவ்வளவு ஆற்றல் இடம் பொருள் ஏவல் இருந்தும் அறிவு மயங்கி அசமந்தமாகச் செய்யும் செயல் தடைப்படும் தாமதமாகும் தோல்வியிலும் முடியும். மும்முறை தலையில் குட்டி தோப்புக்கரணம் போடுவது மூளையை கூர்மைப்படுத்தி உடம்பை உசார்ப்படுத்துவது தான் நோக்கம். விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் வீராங்கனைகள் நிலத்தைத் தொட்டு இருந்து எழும்புவதும் மறைமுகமான விநாயக வணக்கமே.

விநாயகப் பெருமானுக்கு வாகனம் சுறுசுறுப்பான சுண்டெலி உருவம் விகடதோற்றம், பூதக்கால், பெருவயிறு. ஐந்துகரம்: துதிக்கையில் மோதகம். ஒருகொம்புமுறிந்த மொட்டை, பெரியசெவி, சிறிய கண்கள் மூன்று, இந்த விசித்திர தோற்றம் எவருக்கும் சிரிப்பை உண்டாக்கும். சந்திரன் கேலிச் சிரிப்புச் செய்து தண்டனை பெற்று முடி மேல் இருக்கும் பெரும்பேறும் பெற்றான். சிரித்து வாழ்வது ஆரோக்கியத்திற்கு தனி வழி.

விநாயகர் தோற்றத்திலே டார்வின் கோட்பாட்டையும் காணக்கூடியதாக இருக்கின்றது. நீர் நிலை சேர்க்கையில் முதல்முதல் புழுக்கள் தோன்றியது. படிமுறைவளர்ச்சிபெற்று ஊர்வன மெள்ள மெள்ள மிருகங்களாய் குரங்காய் மனிதராய் வளர்ந்தது என்பது இக் கோட்பாடு. ஊர்வனவில் உயர்ந்தது பால் ஊட்டியான எலி. இதுவே விநாயகப் பெருமானின் ஊர்தியாக அமைந்திருக்கின்றது, ஒருகரம் கொண்டு வளர்ச்சிபெற்ற மிருகம்யானை. இது முகம்; ஈற்றில் ஆறறிவு பெற்ற மனிதனின் தோற்றம் உடம்பு. அறிவின் வளர்ச்சியே இவை.

யானைச்செவி, முகம் ஓங்கார வடிவு, ஓம் ஒலியின் வடிவம், வேதவிழுப்பொருள். ஒலியே உலக தோற்றத்திற்கு மூலம். ஒலி அசை கடுநெருக்கத்தில் உண்டாவது 'சூடு, ஒளி, ஓசை, ஒலியெலாம் ஆனாய் நீயே' என்கிறது நாவுக்கரசர் தேவாரம்.

**அ. சபாபதிப்பிள்ளை**

ஔவைப் பிராட்டியார் விநாயகர் அகவலிலே "சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி" என்கிறார். 'நாதம்தாள் வாழ்க' என்கிறார் மணிவாசகர்.

ஒலிக்குமுதல் இடம் கொடுக்கும் வகையில் ஓங்கார வடிவான செவியை முதல் தேவாரத்தில் அமைத்துப் பாடுகிறார் ஞானசம்பந்தர். தோடுஉடைய செவியன் முதலாம் திருமுறை முதல் தேவார முதற் சொல். நாதத்தைக் கிரகிப்பது செவி. 'நாதவிந்துகளாதிநமோ' என்றார் அருணகிரிநாதர். விவிலிய நூலிலும் பரி.யோவான் முதல் அதிகாரம் முதற்பந்தி முதல் வசனம் 'ஆதியிலே வார்த்தை இருந்தது. வார்த்தை கடவுளுடன் இருந்தது, வார்த்தையே கடவுளாய் இருந்தது.' சைவர்களுடைய 'ஓம்' கிறீஸ்தவருடைய, இஸ்லாமியருடைய 'ஆமெனுக்கும் என்ன வித்தியாசம்?

சிவநெறியாகிய சித்தாந்த சைவத்திற்குரியது திருமுறை பன்னிரண்டு. இதுதனித்தனித் தமிழ்வேதம். மந்திரங்களுக்கெல்லாம் முதல் உச்சரிக்கப் பெறுவது "ஓம்". இந்த இரு புனித எழுத்துள் அடங்கி விளங்குகின்றது பன்னிரு திருமுறை. தோடுடைய செவியன் என்ற தொடரின் முதல் எழுத்து 'தோ' (தோ=த்+ஓ) 'ஓ' என்று தொடங்கி, பன்னிரண்டாவது திருமுறைப்பெரிய புராணகடைசிப்பாட்டு ஈற்றடி 'நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்' என்ற தொடரின் கடைசிஎழுத்து 'ம்' உடன் முடிகின்றது, இது திருமுறை கண்டெடுக்க உதவிய பொல்லாப் பிள்ளையாரின் திருவருளே!

விநாயக ஷஷ்டியில் நடைபெறுவது கஜமுக சங்காரம். ஆலயங்களில் பெருங்கதை படித்து முடிவுறும் நாள், சூர சங்காரம் கந்தசஷ்டியில் நடைபெறும். மகுடா சுரசங்காரம் மகா நவமியிலும், திரிபுர அசுரர் சங்காரம் திருக்கார்த்திகையிலும் நடைபெறும். இவற்றை சிவபுராணங்கள் பக்திச் சுவை ததும்ப இலக்கியச் சுவையுடன் விரிவாக விளக்குகின்றன. இவற்றின் உண்மை நூற்கருத்து ஆதியும் அந்தமும், பிறப்பும், இறப்பும், இல்லாத முழுமுதற் ஞானக்கடவுள் பல சந்தர்ப்பங்களில் பலரூபங்களில் அருளாளர் அறிவுக்கு வேண்டியாங்கு அமையத் தோன்றி மும்மல காரியங்களை வலுவிழக்கச் செய்வதே! திருமூலர் திருமந்திரம் இதை மிக அருமையாக விளக்குகின்றது.

(5ம் பக்கம் பார்க்க)

## நினைவஞ்சலி

# அமரர் "ச. கு." அம்மையார்

செல்வந்தர் என்ற செருக்கு அற்ற கருத்து ஒருமித்த அரவணைப்பை வழங்கி இளம் சமுதாயத்தை வளம்படுத்தும் ஆரம்ப பணிகளை மேற்கொண்டு பலருடைய மனதையும் சிந்தனையையும் பார்வையையும் கவர்ந்த ஆயிரம் பிறை கண்ட உத்தமி அமரர், ச. கு. அவர்களின் பாரியார் வள்ளியம்மை அவர்கள் விண் உலகு சென்று இன்று முப்பது நாட்கள் கடந்துள்ள இவ்வேளையில் நினைவு கூர்வது அனைவரினதும் கடமையாகும்.

தையிட்டி கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட அம்மையார் சித்தங்கேணியில் விவாகம் செய்து வாழ்க்கையில் செம்மையுடன் பல அரிய தொண்டுகளை நிறைவு செய்து 88 வயதிலும் இலட்சுமிகரத்துடன், சுயசிந்தனையான செயற்பாடுகளுடன், கந்தஷட்டி உற்சவம் பார்த்து தரிசித்து வீடுசேர்ந்ததும் தனக்கு ஏற்பாடு செய்துள்ள இறைவனுடைய அழைப்பை ஏற்று மறைந்துள்ள செய்தி அனைவரினதும் சிந்தனைகளை ஒரு கணம் திணறடித்தது.

வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியின் இரு மாடிக் கட்டடத்துக்கு தமது சேவையாக கருதி பல நல்ல வசதிகளுடன் கூடிய அமைப்புடன் அம்மையார் கட்டடம் நிறுவ முயற்சி எடுத்து நிறைவு செய்தமையை "வள்ளியம்மை மண்டபம்" மாணவ சமுதாயத்துக்கு இன்றும்நினைவுபடுத்துகின்றது.

பல தடவை பல ஆலயங்களி திருப்பணி வேலைகளுக்கு தாராள சிந்தனையுடன் நிதி உதவிகள் அளித்து வந்ததுடன் மேலும் பல தடவைகள் பல மகா கும்பாபிஷேகங்களின் முக்கிய உபயகாரர்களாகவும், சைவ ஆலயங்களில் நடைபெறும் உற்சவ தினங்களில் ஈழத்து மண்ணில், தெய்வ கடாட்சம் பெற்ற இசை மேதை - சுந்தராம்பாள் அம்மையரின் தோற்றத்துடன் அம்மையார் மிகவும் பிரசித்தமாக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறை சிந்தனையும், நல்ல செயல்திட்டங்களுடன் கூடிய அம்மையாருடன் நெருங்கி பழகும் வாய்ப்புகள் கிடைக்காத பொழுதும் அவதானிக்கும் வாய்ப்பு கிடைத்தமையுடன் அஞ்சலி செலுத்த கிடைத்த வாய்ப்பை பெருமையுடன் நினைவு கூர்வோமாக.

**ஜீ. சிதம்பரநாதன்**

# பேரணியை அடுத்து டர்பன் நகரில் கலவரம்

## சூறையாடலும் நிகழ்ந்தது!

(ஜொஹனஸ்பேக்)

தென்னுபிரிக்காவில் இன ஒதுக்கல் நடவடிக்கையை எதிர்த்து நடைபெற்ற பேரணியின் பின் டர்பன் நகரில் பெரும் கலவரங்கள் உருவானதாக நேற்று அறிவிக்கப்பட்டது டர்பன் நகரில் நடைபெற்ற கலவரங்களில் இதுவே மிக, மிக மோசமானது எனவும் வர்ணிக்கப்பட்டது;

போர்க்குரல் எழுப்பிக் கொண்டு மக்கள் கூட்டம் அங்குமிங்கும் ஓடி சூறையாடலில் இறங்கியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதனையடுத்து பொலிஸார் துருப்புகளின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அறிக்கைகள் அறியத்தந்தன.

பலர் காயமடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆனால் காயமடைந்தோர் தொகை குறித்து உடனடியாகத் தகவல் ஏதும் வெளியாகவில்லை,

பேரணி அமைதியாக நடைபெற்றதாகவும் அதன்பின்பே வன்முறை உருவெடுத்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

சிறைவைக்கப்பட்டுள்ள தேசியவாதத் தலைவர் திரு. நெல்ஸன் மண்டேலாவை விடுதலை செய்யக்கோரி தேசிய இயக்கம் ஒன்றினை தொடங்கும் நோக்கத்துடனேயே மேற்படி பேரணி நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ஐ.நா.வில் ஈரான்மீதான எதிர்ப்பு:

## குறிப்பிட்ட நாடுகளுடனுன உறவு பற்றி மறு பரிசீலனை

(தெஹ்ரான்)

ஈரானில் மனித உரிமைகள் மீறப்படுகின்றது என ஐக்கிய நாடுகள் சபையில் பிரச்சினை கிளப்பப்பட்டபோது அதற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுடனுன உறவை மறுபரிசீலனை செய்ய ஈரான் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை ஈரானிய வெளிநாட்டமைச்சர் திரு. வெலாயத்தி வெளியிட்டுள்ளார்.

## ஈராக் மீது ஈரான் தாக்குதல் 14பேர் மடிவு என அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் இரு இராணுவப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் ஈரான்யுத்த விமானங்கள் திடீர் தாக்குதலை நடாத்தியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஈராக் ஈரானின் இரு கைத்தொழில் பிரதேசங்கள் மீது தாக்கியதற்கு பதிலாக இது நடைபெற்றதாக ஈரான் அறிவித்தது. இந்தச்சம்பவத்தில் பதினுன்கு பேர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவங்கள் குறித்து இரு நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையிடம் புகார் செய்துள்ளன.

### மத்திய இணையமைச்சர் சிதம்பரம் அறிவிப்பு

## சேதுசமுத்திரத் திட்டம்: இன்று பாதுகாப்பு முக்கியத்துவம்

(ராமநாதபுரம்)

"சேது சமுத்திரத்திட்டம் பாதுகாப்பு ரீதியில் பெரும் முக்கியத்துவமிக்கதாக இன்று இருக்கிறது." என்று மத்திய இணையமைச்சர் திரு பி. சிதம்பரம் கூறியுள்ளார். ராமநாதபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் நூற்ருண்டு விழாவில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் சொன்ஞர்.

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதும குறிப்பிடத்தக்கது.

மேற்படி விழாவில் நூற்று ஐம்பது விடுதலை வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை மதுரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் இணையமைச்சர் திரு, சிதம்பரம் பேசுகையில், "பாரத விஞ்ஞானிகளும், டாக்டர்களும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்ப வேண்டும். ஜாதி, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்து சகலருக்கும்சமவாய்ப்பளிக்கும் நல்லதோர் திட்டத்தை பிரதமர் திரு. ராஜீவ் காந்தி செயற்படுத்த முனைந்துள்ளார். 21ம் நூற்ருண்டில் அவரின் தலைமையில் நாடு பெரும் பெருமை காணும்" என்று சொன்ஞர்.

## செய்யாறு இடைத்தேர்தல்: இன்று மாலை முடிவு தெரியும்?

(வட ஆற்காடு)

நேற்று நடைபெற்ற வட ஆற்காடு மாவட்டம் செய்யாறு சட்டசபைத் தொகுதி இடைத் தேர்தல் முடிவு இன்று மாலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அ.இ.தி.மு.க வேட்பாளராக திரு. குப்புசாமியும், தி.மு.க. வேட்பாளராக திரு. அன்பழகனும் மற்றும் எட்டு சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

ஒருசில சிறு சம்பவங்களைத் தவிர குறிப்பிடத்தக்க அசம்பாவித சம்பவம் ஏதும் நிகழவில்லை.

ஒரு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து முந்நூற்றுஎண்பத்து மூன்று வாக்காளர்கள் இத்தொகுதியில் உள்ளனர்.

இவர்களில் ஆண்களைவிட ஆயிரத்து முந்நூறு பெண் வாக்காளர்கள் கூடுதலாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சேலம் 3 நாள் தமிழ்விழா: கி. ஆ. பெ. துவக்கி வைத்தார்

(சேலம்)

சேலத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக மூன்றுநாள் மாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெற்றது.

இவ்விழாவுக்குத் தமிழ்நாடு தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தலைமை தாங்கிஞர்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் விழாவைத் தொடக்கி வைத்தார்

காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் மற்றும் தி. மு. க. எம். எல். ஏ. திரு. கே. அன்பழகன் முதலானோர் கலந்து கொண்டனர்.

இலங்கைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### பங்களாதேஷ் ஜனுதிபதி எர்ஷாத் தகவல்

## புதுவருடம் முதல் பகிரங்க அரசியல் செயற்பாடு அனுமதி

(டாக்கா)

"பங்களாதேஷில் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் பகிரங்க அரசியல் நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்படும்" என்று பங்களாதேஷ் ஜனுதிபதி லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் அறிவித்துள்ளார். வானெலி மூலமும், தொலைக்காட்சி மூலமும் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் அவர் இவ்வறிவித்தலை வெளியிட்டார்.

விரைவில் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்துவதற்கும் அதனடிப்படையில் அரசியல் சாஸனத்தை உறுதிப்படுத்துவதற்குமான ஏற்றதும், உரியதுமான நேரம் வந்து விட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் பகிரங்க அரசியல்நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

கருத்துக் கணிப்பு நடத்தியதன் மூலம் தேர்தல் நடத்தப்படும் வரை தான் பதவியில் இருக்க ஜனுதிபதி அங்கீகாரம் பெற்றிருந்தார்.

பத்து மாத இடைவெளிக்குப்பின் புதுவருடத்துடன் பகிரங்க அரசியல் நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்டு பருவமழை காலத்துக்குமுன் தேசிய தேர்தல் நடைபெற வழிவகுக்கப்படும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

## ஆட்சியாளர்—கிளர்ச்சியாளர் உகண்டாவில் உடன்பாடு

(கம்பாலா)

உகண்டாவில் ஆட்சியாளர்களுக்கும், கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் புதிய உடன்பாடு ஒன்று நேற்று முன்தினம் நைரோபியில் கைச்சாத்திடப் பட்டது!

கடந்த ஜூலை மாதம் உகண்டா ஜனுதிபதி ஒபேட்டே புரட்சி மூலம் பதவி நீக்கப்பட்டதையடுத்து அங்கு புதிய ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

### கேரளாவில் பொலிஸ் நிலையம் மீது

## தாக்குதல்: பொலிஸ சுட்டதில் ஒருவர் பலி; மற்ருெருவர் காயம்

(புதுடில்லி)

கேரளாவில் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியதாகநேற்றுஅறிவிக்கப்பட்டது.

பதிலுக்குப் பொலிசார் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

கைதி ஒருவர் பொலிஸ் காவலில் இருந்தபோது மடிந்ததற்கு ஆட்சேபம் தெரிவித்தே இக்கும்பல் கலாட்டா பண்ணியுள்ளது.

## வெங்கட்ராமன் மொறிஷியஸ் செல்கிருர்

(புதுடில்லி)

மொறிஷியஸ் மாஜி கவர்னர் ஜெனரல் சேர். ராம்குலாவின் இறுதிச் சடங்கில் பாரதத்தின் சார்பில் துணை ஜனுதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கலந்து கொள்கிருர்.

புதன்கிழமை வரை அங்கு அரசு தேசிய துக்க நாட்களாக அறிவித்துள்ளது.

### மொறீஷியஸ் முன்னுள்

## கவர்னர் ஜெனரல் 85-வது வயதில் மரணமானுர்!

(லண்டன்)

மொறீஷியஸின் முன்னுள் கவர்னர் ஜெனரலும், பிரதம மந்திரியுமானசேர்.ராம்குலாம் (85 வயது) காலமானுர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

வைத்தியத்துறையில் ஈடுபட்ட அவர் தனது அரைவாசி வாழ்நாளை அரசியலில் கழித்தார்.

1948ம் வருடம் பாராளுமன்ற அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழிற் கட்சித் தலைவரான இவர் 1976, 1977ம் வருடங்களில் ஆபிரிக்க ஒற்றுமைஸ்தாபனத் தலைவராகப் பதவி வகித்தார்.

1973ல் ஐ. நா. சபையின் மனித உரிமைகள் பேணல் விருது வழங்கப்பட்டது. 1984ல் நேரு சமாதானப் பரிசும் கிடைத்தது.

## பெண்களே கூடுதல்

(கொஹாட்டி)

அஸாம் தேர்தலில் நேற்றுக் காலை கூடுதலாகப் பெண்களே வாக்களித்தனர்.

125 சட்டசபைத் தொகுதிகளுக்கும், 14 லோக சபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

## பாரதத்தின் ஆன்மீக நம்பிக்கை

(மைசூர்)

"ஆன்மீக நம்பிக்கையில் தான் பாரதம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. அதற்கு எத்தடங்கலும் வரவே கூடாது" என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று மைசூரில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் கூறிஞர்.

"வாழ்ந்து வெற்றி காண வேண்டும்" என்று அவர் வற்புறுத்திஞர்.

### ஒலிக்கு முதலிடம்...

—4ம் பக்கத் தொடர்

"அப்பணி செஞ்சடை
ஆதிபுராதனன்
முப்புரம் எய்தனன்
என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவன மும்மல
காரியம்
அப்புர மெய்தமை
யாரறிவாரோ!"

ஈழமுரசு

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு நாய், பூனைகளால் பெருந்தலையிடி!

யாழ். பெரியாஸ்பத்திரி வளவிற்குள் கட்டாக்காலி நாய்களும், பூனைகளும் பெரும் தொல்லை தருவதாக ஆஸ்பத்திரி உயரதிகாரியொருவர் தெரிவித்தார். இவைகள் வார்ட்டுகளுக்குள் புகுந்து நோயாளிகளின் உணவுப் பொருட்களை எடுக்கின்றனவாம். ஆஸ்பத்திரி பாதுகாப்பு ஊழியர்கள் இவற்றை தினமும் வெளியேற்றினாலும், அவை எப்படியும் மீண்டும் வருகின்றனவாம். சில வாரங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள வீதிகளில் பல கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ராஜ்ய சபாவில் எம். பீக்கள் கோரிக்கை:

# இந்திய பாராளுமன்றக் குழுவை இலங்கைக்கு நேரில் அனுப்பி நிலைமையை அறிதல் வேண்டும்!

(புதுடில்லி)

தென்னுபிரிக்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குற்றஞ்சாட்டும் இந்திய அரசு, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து மௌனம் சாதிப்பது விசனத்துக்குரியது என்று ராஜ்யசபாவில் பேசிய தி. மு. க. எம். பி. திரு. வி. கோபாலசாமி தெரிவித்தார்.

அணிசேரா வெல்த் நாடுகள் அமைப்புக் கூட்டம், ஐக்கிய நாடுகள் சபை, 'நாம்' மாநாடு ஆகிய எதிலாவது இலங்கைப் பிரச்சினை பற்றி இந்தியா எதுவும் பேசாததற்கும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கத்தின் படைகளால் மேற்கொள்ளப்படும் வன்செயல்கள், படுகொலைகளைத் தடுத்து நிறுத்த இந்தியா உடனடியாக சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி எம். பியான திரு. எம். கல்யாண சுந்தரம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினரான திரு. ரி. தங்கபாலு பேசுகையில், இந்தியாவின் நட்புறவை தப்பாக எடைபோட்டு இலங்கையிலுள்ள தமிழினத்தை முற்று முழுதாக ஒழித்துக் கட்ட இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குற்றம் சாட்டியதுடன், இவ்விடயத்தில் இந்தியா புதிய அணுகு முறையை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அண்ணா தி. மு. க. உறுப்பினரான திரு. வலம்புரி ஜான் பேசுகையில், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கமே மீறிவருவதாகக் குற்றம் சாட்டியதுடன், நிலைமையை நேரில் அறிவதற்கு இந்திய பாராளுமன்றக் குழுவொன்றை நேரில் அனுப்ப வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

## இப்படி ஒரு புகார்

இலங்கையின் கடற்பிரதேசத்தில் வெளிநாட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதாக அத்தனகல எம். பி. லக்ஸ்மன் ஜெயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதனை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சொன்னார்.

1980ல் வேலைநிறுத்தம் செய்த

## இருநூறு ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை

(கொழும்பு)

1980 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பங்குபற்றி இது வரை மீண்டும் வேலை வழங்கப்படாத நிலையில் இருநூறு அரசாங்க ஆசிரியர்கள் இருப்பதாக இலங்கை ஆசிரிய சங்கம் கல்வி அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாக இவர்கள் தொழில் எதுவுமின்றி வாழ்க்கையில் மிகவும் கஷ்டமடைவதால் இவர்களை உடனடியாக வேலைக்குச் சேர்க்க வேண்டுமென்றும் சங்கம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக கல்வி அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி, ஜனாதிபதிக்கும் சங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளது.

## கனத்த இதயங்களுடன்

சி சிவலிங்கம், செ. நவரத்தினம் ஆகிய இருவரின் அகால மரணத்துக்கு அஞ்சலி தெரிவித்து ''கனத்த இதயங்களுடன் ..'' என்ற தலைப்பில் பிரசுரமொன்றை புரட்சிகர ஈழ விடுதலைக் கழகம் (றெலோ) வெளியிட்டுள்ளது.

## 32 கழகங்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி

உரும்பராய் மேற்கு, திருக்குமரன் சன சமூக நிலையத்தாரால் நடாத்தப்படும் ஏழுபேர் கொண்ட நொக் அவுட் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

உரும்பராய் மேற்கு, திருக்குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 32 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

புதன், சனி, ஞாயிறு தினங்களில் இரண்டு போட்டிகள் வீதம் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் முதலாவது போட்டி பிற்பகல் 3-45க்கும், இரண்டாவது போட்டி 4-45க்கும் ஆரம்பமாகும்.

ஜனவரி மாதம் 26-ம் திகதி இறுதிப் போட்டியை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

போட்டியில் முதலிடம் பெறும் கழகத்திற்கு ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடம் பெறும் கழகத்திற்கு ஐநூறு ரூபாவும் பரிசாக வழங்கப்படும். அத்துடன் சிறந்த வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

நாளைய தினம் நடைபெறும் முதலாவது போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும், சுதந்திரன் விளையாட்டுக் கழகமும் மோதும். இரண்டாவது போட்டியில் பறக்கும் ஜேயல் விளையாட்டுக் கழகமும், அரசினர் வைத்தியசாலை விளையாட்டுக் கழகமும் மோதும்.

### மகாதேவா...

யில் ஔவைபவம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. எஸ். நடராஜாவும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.

அப்போது மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள பலகையில் இங்கு சிரமதானப் பணிகளை மேற்கொண்ட சகல ஸ்தாபனங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தபால் பிரதிப் பணிப்பாளர்கள் எஸ். சிவதாசன், கே. கிருபைதிலகன், யாழ். மேற்பார்வை அரசாங்க அதிபர் திரு கே. ஆரியநாதன், தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம், உதவி அரசாங்க அதிபர்கள் எஸ். பி. பாலசிங்கம், ஏ. சபாபதிப்பிள்ளை, வ. துரைராஜா, நெடுஞ்சாலைத் திணைக்கள பிரதம பொறியியலாளர்கள் வி. திஸ்ஸநாயகம், என். பாலேந்திரா, தபால் போதி வேலைப் பொறுப்பு பொறியியலாளர் திரு. எஸ் இராமகிருஷ்ணன் ஆகியோரும் இவ் வைபவத்தில் பங்குபற்றினர்.

### வடபகுதி ...

—1-ஆம் பக்கத் தொடர்

ருந்து ரயிலில் வந்த பயணிகளுடன் புறப்பட்ட பஸ்ஸும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

### பஸ்களில்....

...1-ஆம் பக்கத் தொடர்

கள் பிந்தியே இக் கடிதங்கள் உரியவர்களிடம் போய்ச்சேரக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்ட கடிதங்கள் அனைத்தும் நேற்றுக் காலையே இங்கிருந்து அனுப்பப்பட்டன. அதே போல அனுராதபுரத்தில் வந்திருந்த யாழ்ப்பாணக் கடிதங்களும் நேற்று முன் தினம் மாலையிலேயே யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டது.

இரு தினங்களுக்கு ஒரு தடவையாக இங்கிருந்து கடிதங்களை அனுப்பவும் வெளியூர் கடிதங்களைக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

லண்டன் ஆஸ்பத்திரியில் நடந்த சம்பவம்:

## ஆஸ்த்மா நோயாளிக்கு உடலுறவு சிகிச்சை; அகப்பட்ட இலங்கை டாக்டருக்கு கல்தா!

(லண்டன்)

ஆஸ்த்மா நோயாளியான பெண் ஒருவருக்கு உடலுறவு கொள்வதுதான் சிறந்த வைத்தியமென்று கூறி, அந்த நோயாளிப் பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படும் டாக்டர் ஒருவர் வைத்தியர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சம்பவம் இங்குள்ள ஆஸ்பத்திரியொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட டாக்டர் இலங்கையரான பொன்னம்பலம் சொர்ணலிங்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விவாகரத்துப்பெற்றவரான குறிப்பிட்ட பெண் ஆஸ்த்மா நோய்க்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். சம்பந்தப்பட்ட டாக்டர் அடிக்கடி அவரைச் சென்று பார்வையிட்டதுடன், உடலுறவு கொள்வதன் மூலம் ஆஸ்தமா நோய் மாறுமெனக் கூறியதுடன், பல தடவை நோயாளியுடன் தவறாகவும் நடந்து கொண்டாராம்.

நோயாளி ஆஸ்பத்திரியிலிருந்து வீடு சென்ற பின்னர் அவரது வீட்டிற்கும் டாக்டர் அடிக்கடி விஜயம் செய்ததாலேயே பிரச்சினை பகிரங்கமாகியது.

ஆஸ்பத்திரி கவுன்ஸிலின் குழுவொன்று இது பற்றி விசாரணை நடத்திய பின்னரே டாக்டரை சேவையிலிருந்து நிறுத்தியது.

### ''குழப்பம்....

வழங்கவில்லை எனவும் படத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டது. இது முற்றிலும் பொய். படப்பிடிப்புக் குழுவினர் உல்லாசப் பிரயாணிகளாகவே இங்கு வந்தனர். தொலைக்காட்சிப் படத்தை பிடிக்க அவர்கள் அனுமதி கோரவில்லை, இரகஸியமாகவே அவர்கள் இந்தப் படத்தைப் பிடித்தனர். இந்தப் படப்பிடிப்புக் குழுவினர் வந்தது பற்றி பிரிட்டிஷ் தூதரகத்துக்கும் தெரியவில்லை'' எனவும் அவர் சொன்னார்.

''இந்த தொலைக்காட்சிப் படத்தில் வடக்கு, கிழக்கு புத்தளம் வரையிலான மேற்குப் பகுதியான சில பகுதிகள் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளாக எடுத்துக் காட்டும் இலங்கை தேசப் படமும் காட்டப்பட்டது. இந்தப் படம் உண்மையில் தனி ராஜ்யத்தின் ஈழத்தின் படமாகும். வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என அரசு தடை விதித்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இது உண்மைக்கு புறம்பானது. கண்காணிப்புவலயம் கொண்டு வரப்பட்டதால் மீன் பிடித் தொழில் மட்டுப்படுத்தப்பட்டது ஆனால் அது ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை'' என்றும் அவர் மேலும் சொன்னார்.

ஓய்வுபெற்ற அரச ஊழியர் என கூறும் ராமாசிவகுரு என்பவரது பேட்டியில் இலங்கையின் நீதிபரிபாலன அமைப்பில் தமிழர்கள் கிடையாது எனவும், வைத்தியர்களாகவோ, பொறியியலாளர்களாகவோ வரும் வாய்ப்பு தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். ஆனால், பிரதம நீதியரசரும், சட்டமா அதிபரும் தமிழர்களே என்பதை இவர் மறைத்துவிட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசு சமாதானத் தீர்வுகாண முன்வரவில்லை எனவும், பாரம்பரிய தமிழ் ராஜ்யம் அதற்கு திருகோணமலை தலைநகராக வரும் எனவும் தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தம் இலங்கை தன்னிச்சையாக எடுத்த முடிவு என்றும் இலங்கை ராணுவம் அதனை மீறி வருவதாகவும் தொலைக்காட்சியில் மேலும் கூறப்பட்டது.

### கண்காணிப்பு ..

மாவட்ட விசாரணைகளைமுடித்துக் கொண்டனர். இது வரை இப்பகுதியில் இருந்து முப்பது சாட்சிகளின் தகவல்களை அவர்கள் பெற்றனர்.

### ஆண்....

1 ம் பக்கத் தொடர்

தவெள்ளத்தில் கிடந்ததையடுத்து ஆஸ்பத்திரி டாக்டர்கள் பரிசோதனையின் பின் இருவரும் இறந்துவிட்டதாக அறிக்கை சமர்ப்பித்தபின் சடலங்கள் சவக்காலைகுள் வைக்கப்பட்டன.

ஆனால் சிலமணித்தியாலத்தின்பின்பு சவக்காலைக் கதவு தட்டப்பட்டபோது பொலிஸார் ஜன்னலூடாக எட்டிப் பார்த்தார். குறிப்பிட்ட ஆண் சடலம் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் கதவைத்திறக்குமாறு சைகைமூலம் வேண்டியது.

குறிப்பிட்ட பொலிஸார் சில நிமிடங்கள் அதிர்ச்சியடைந்தாராயினும், பின்னர் கதவைத்திறந்து அந்தச் 'சடலத்தை' வார்ட்டுக்குக் கொண்டுசென்றார். அவசர அவசரமாக அவருக்குச் சத்திர சிகிச்சையளிக்கப்பட்டது. அவர் இப்போது நலமே இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### மரக்கறி....

1 ம் பக்கத் தொடர்

மதியான புடவைகள். பால்மாப்பொருட்கள் இனம்தெரியாதவர்களால் வானொன்றில் ஏற்றிச் செல்லப்பட்டன.

### யாழ்நகர்....

முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

கொழும்பிலிருந்து அனுராதபுரம் வரை ரயிலில் வரும் யாழ்ப்பாண பயணிகள் இந்த பஸ்ஸில் யாழ்ப்பாணம் வர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வடைசிங் அம்பாளவையகம் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 17-12-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336